# Aadhavaa Publications

## சமூக அறிவியல்

## மாதிரி வினாத்தாள் - 2

## பத்தாம் வகுப்பு

---

கால அளவு : 15 நிமிடம் + 3 மணி | மதிப்பெண்கள்: 100

பகுதி-1

அனைத்து 14 வினாக்களுக்கும் விடையளிக்கவும். 14x1=14

1. 1914 முதல் 1918 வரை மற்றும் 1939 முதல் 1945 வரை நடைபெற்ற இரண்டு போர்களும் உலகப் போர்கள் என்று குறிப்பிடப்படுவதற்கு காரணம். (PTA-5/Q-2)
   அ) மோதல்கள் நடைபெற்ற பகுதிகள் பரந்து விரிந்ததாக இருந்தன.
   ஆ) ஆயுதமேந்திப் போரிட்டோர், பொதுமக்கள் ஆகியோரின் இறப்பு எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தது.
   இ) ஐரோப்பிய, ஆசிய, ஆப்பிரிக்கக் கண்டங்களில் பல முனைகளில் போர்கள் நடைபெற்றன.
   ஈ) இவை அனைத்தும்
2. சோட்டா நாக்பூர் குத்தகைச் சட்டம் எந்தப் பின்னணியில் நிறைவேற்றப்பட்டது? (Sep.20)
   அ) கோல் கிளர்ச்சி ஆ) இண்டிகோ கிளர்ச்சி
   இ) முண்டா கிளர்ச்சி ஈ) தக்காண கலவரங்கள்
3. பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் செயற்குழுவிற்கு 1969 இல் தலைவராகப் பதவியேற்றவர் யார்?
   அ) ஹபீஸ் அல்-ஆஸாத் ஆ) யாசர் அராபத் இ) நாசர் ஈ) சதாம் உசேன்
4. கூற்று: சென்னை மாகாணத்தில் 1920 முதல் 1937 வரை நீதிக்கட்சி தொடர்ந்து ஆட்சியில் இருந்தது.
   காரணம்: இக்காலகட்டத்தில் இரட்டையாட்சிக்கு எதிராக காங்கிரஸ் கட்சி சட்டமன்றத்தைப் புறக்கணித்தது.
   அ) காரணம், கூற்று ஆகியவை சரி.
   ஆ) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றின் சரியான விளக்கமல்ல.
   இ) காரணம், கூற்று இரண்டுமே தவறு.
   ஈ) காரணம் சரி. ஆனால் கூற்றுடன் அது பொருந்தவில்லை.
5. டெல்லி மெட்ரோ ..........நாட்டின் ஒத்துழைப்பின் எடுத்துக்காட்டாகும்.
   அ) அமெரிக்கா ஆ) ரஷ்யா இ) ஜப்பான் ஈ) ஆஸ்திரேலியா
6. ........இந்து சமய மக்களால் புனித நதியாகக் கருதப்பட்டு, தமிழ் மாதமான தை மாதத்தில் பல்வேறு விழாக்கள் கொண்டாடப்படுகின்றன.
   அ) பெண்ணையாறு ஆ) பாலாறு இ) வைகை ஈ) காவிரி
7. மேற்கத்திய இடையூறுகளால் மழைப்பொழிவைப் பெறும் பகுதி ..........
   அ) தமிழ்நாடு ஆ) கேரளா இ) பஞ்சாப் ஈ) மத்தியப் பிரதேசம்
8. இந்தியாவின் தங்க இழைப் பயிர் என அழைக்கப்படுவது ..........
   அ) பருத்தி ஆ) கோதுமை இ) சணல் ஈ) புகையிலை
9. பொருந்தாததைத் தேர்ந்தெடுக்கவும்.
   அ) தொலைபேசி ஆ) கைபேசி இ) தொலைநகல் ஈ) செய்தித்தாள்
10. பின்வருவனவற்றில் தோல் தொழிற்சாலைகள் இல்லாதது எது?
    அ) ராணிப்பேட்டை ஆ) தர்மபுரி
    இ) ஆம்பூர் ஈ) வாணியம்பாடி
11. கூற்று: கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மண்டலம் தமிழ்நாட்டின் ஜவுளி பள்ளத்தாக்கு என அழைக்கப்படுகிறது.
    காரணம்: இவைகள் நெசவாலைகள் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்பை அளிக்கின்றன.
    அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.
    ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

For Orders Plz Contact : 90921 09966



AADHAVAA PUBLICATIONS 9092109966

இ) கூற்று சரி. ஆனால் காரணம் தவறு.
ஈ) கூற்று தவறு. ஆனால் காரணம் சரி.

**12. மாநிலங்களில் உள்ள பல்கலைக்கழகங்களின் வேந்தராக செயல்படுபவர் யார்?**
அ) குடியரசுத் தலைவர் ஆ) ஆளுநர் இ) பிரதம அமைச்சர் ஈ) முதலமைச்சர்

**13. .......... இந்தியாவில் தோன்றியதால் உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற வழி வகுத்தது.**
அ) நீலப் புரட்சி ஆ) வெள்ளைப்புரட்சி இ) பசுமைப் புரட்சி ஈ) சாம்பல் புரட்சி

**14. ∴பீனிக்ஸ் குடியிருப்பு யாரால் நிறுவப்பட்டது?**
அ) காந்தியடிகள் ஆ) ஜான் ரஸ்கின் இ) டால்ஸ்டாய் ஈ) தாரோ

## பகுதி – II

**குறிப்பு: i) எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 10x2=20**
**ii) 28 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

15. கடல் பாதுகாப்பு மேலாண்மையில் சதுப்பு நிலத்தாவரங்களின் பங்கினை குறிப்பிடுக.
16. ஈரவை சட்டமன்றங்களைக் கொண்டுள்ள மாநிலங்கள் யாவை?
17. முசோலினியின் ரோமாபுரி நோக்கிய அணி வகுப்பின் விளைவுகள் யாவை?
18. 1801 ஆம் ஆண்டு கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை விளக்குக
19. சேரன்மாதேவி குருகுலப் பள்ளியில் நடந்த பாகுபாடு பற்றி கூறுக.
20. பறக்கும் தொடருந்துத் திட்டம் (MRTs) என்றால் என்ன?
21. அரசியலமைப்பு என்றால் என்ன?
22. உலகளாவிய தெற்கு நாடுகள் என்று அழைக்கப்படுபவை யாவை?
23. பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்களின் பெயர்களைக் குறிப்பிடுக
24. இந்தியா உறுப்பினராக உள்ள ஏதேனும் ஐந்து உலகளாவிய குழுக்களைப் பட்டியலிடுக.
25. இந்தியாவின் வேளாண்மை முறைகளைக் குறிப்பிடுக
26. இந்தியாவின் பொருளாதாரக் கொள்கைகளின் பெயர்களை எழுதுக.
27. காலநிலையைப் பாதிக்கும் காரணிகளை பட்டியலிக.
28. புயலின் போது வானிலை மையம் மீனவர்களை எவ்வாறு எச்சரிக்கிறது?

## பகுதி – III

**குறிப்பு: i) எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 10x5=50**
**ii) 42 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

**29. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | திருவருட்பா | - | முட்டை மற்றும் கோழிகள் |
| 2. | வெள்ளிப் புரட்சி | - | கோவில் நகைகள் |
| 3. | நாச்சியார் கோவில் | - | ஜீவகாருண்யப் பாடல்கள் |
| 4. | கருப்புப் பணம் | - | குத்துவிளக்கு |
| 5. | நாகர்கோவில் | - | கடத்துதல் |

**30. அ) வேறுபடுத்துக.**
i) சாலை வழிப்போக்குவரத்து மற்றும் இரயில் வழிப்போக்குவரத்து
ii) உணவுப் பயிர்கள் மற்றும் வாணிபப் பயிர்கள

**ஆ) காரணம் கூறுக.**
விவசாயிகள் இரசாயன வேளாண்மையிலிருந்து கரிம (இயற்கை) வேளாண்மைக்கு மாறுகிறார்கள்.

31. உலகப்போர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் (1919-1939) இந்தியாவில் காலனிய நீக்கச் செயல்பாடுகள் எவ்வாறு நடைபெற்றன என்பதனைக் குறித்து வரிசையாக விவரிக்க முயற்சி செய்யவும்.
32. சில நேர்முக மற்றும் மறைமுக வரிகளை விளக்குக.
33. வேலுநாச்சியார் பற்றி விரிவாக விடையளிக்கவும்.
34. வாங்கும் திறனைப் பாதிக்கும் காரணிகள் யாவை? அவற்றை விளக்குக
35. தீபகற்ப ஆறுகளைப் பற்றி விவரி.
36. தீவிர வேளாண்மை மற்றும் தோட்ட வேளாண்மையின் பண்புகளை வெளிக் கொணர்க.
37. சாலைப் பாதுகாப்பு விதிகள் பற்றி எழுதவும்.

AADHAVAA PUBLICATIONS 9092109966 www.Padasalai.Net

For Orders Plz Contact : 90921 09966

38. பிரிக்ஸ் (BRICS) கூட்டமைப்பு உருவானதற்கான காரணம் மற்றும் அதன் நோக்கங்களை எழுதுக.
39. இந்தியாவின் பிரிவினைக்குப் பின்னால் இருந்த காரணங்களை விவாதிக்கவும்.
40. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.

**குறிப்பு: பார்வை மாற்றுத் திறனாளி மாணவர்கள் காலக்கோடு மற்றும் வரைபடத்தில் முறையே நிகழ்வுகளையும் இடங்களையும் குறிப்பிட்டுக் காட்டுவதற்கு பதிலாக அவற்றைப் பற்றிய குறிப்புகள் மட்டும் எழுத வேண்டும்.**

41. கீழ்க்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக.
1910 முதல் 1930 வரையிலான ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.
42. இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.
i) டில்லி ii) ஜான்சி iii) அலகாபாத iv) லக்னோ v) பாரக்பூர்

## பகுதி – IV

குறிப்பு: இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும். **2x8=16**

43. இந்திய சமூகத்தின் புத்தெழுச்சிக்கு இராமகிருஷ்ண பரமஹம்சரும் விவேகானந்தரும் ஆற்றிய தொண்டினை திறனாய்வு செய்க (or)
    i. இத்தாலியில் முசோலினியின் எழுச்சியினைப் பற்றி கூறுக.
    ii. இந்திய தேசிய காங்கிரஸ் பின்பற்றிய குறிக்கோள்கள் (கோரிக்கைகள்) மற்றும் வழிமுறைகளைப் பட்டியலிடுக.
44. கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.
    1. மேற்குத் தொடர்ச்சி மலைகள்
    2. காவிரி ஆறு
    3. தக்காண பீடபூமி
    4. மலபார் கடற்கரை
    5. தென்கிழக்கு பருவக்காற்று வீசும் திசை
    6. இந்தியாவின் மான்செஸ்டர்
    7. பன்னா உயிர்க்கோள பெட்டகம்
    8. மும்பை ஹை

(or)

**கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.**

1. பழவேற்காடு ஏரி
2. சென்னை
3. அதிக மக்களடர்த்தி மாவட்டம்
4. காவிரி டெல்டா
5. சென்னை to பெங்களூரு சாலைவழிப் போக்குவரத்து
6. பாக் நீர்ச்சந்தி
7. தேயிலை விளையும் பகுதி
8. தொட்டபெட்டா

AADHAVAA PUBLICATIONS 9092109966
www.Padasalai.Net

AADHAVAA PUBLICATIONS
www.Padasalai.Net

For Orders Plz Contact : 90921 09966